# விலைமனு கோரல்
## மாவட்ட செயலகம் - புத்தளம்

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சேவைகள் தொடர்பாக திறந்த விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்ம். | விலைமனு இல. | சேவை | மீள் செலுத்தப்படாத விலை மனு வைப்புத் தொகை - (ரூபா). | பாதுகாப்பு வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | PU/PR/SER/24/105 | 2025 ஆம் வருடத்திற்காக மாவட்ட செயலகத்திலும் 16 பிரதேச செயலகங்களிலும் உள்ள 45 வாகனங்களை காப்புறுதி செய்தல். | ரூபா.1,000.00 | - |
| 02 | PU/PR/SER/24/107 | 2025 ஆம் வருடத்திற்காக மாவட்ட செயலகத்திலும் 16 பிரதேச செயலகங்களிலும் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ளல். | ரூபா.1,000.00 | தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரரால் ரூபா.50,000.00 தொகையினை மாவட்ட செயலாளரின் பெயரில் பாதுகாப்பு வைப்புத் தொகையாக வைப்பில் இடல் வேண்டும். |

02. மேற்கூறப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2024.12.04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 2024.12.23 ஆந் திகதி திங்கட்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலை மனுவினை **“மூலப் பிரதி”** மற்றும் **“நகல் பிரதி”** என தொகுதி இரண்டாக பூர்த்திசெய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப்பக்க மேல் மூலையில் உரிய விலை மனு இலக்கம் மற்றும் சேவையினையும் குறிப்பிட்டு 2024.12.24 ஆம் திகதியான திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்டசெயலாளர் / தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலக பெறுகை அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியினுள் இடுமாறு வேண்டப்படுகின்றீர். பி.ப. 2.00 மணி நிறைவடைந்ததும் விலை மனுப்பத்திரம் மாவட்டசெயலகக்கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. தகைமையான சேவை வழங்குனரை தெரிவு செய்வதில் நிறுவன பதிவு மற்றும் அனுபவம் உட்பட்ட நீங்கள் பெற்றுத்தரக் கூடிய குறிப்பிடதக்க முக்கிய சேவைகள் போன்ற அனைத்து விடயங்களும் மதிப்பீட்டின் போது கவனத்திற்கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவம் பற்றி உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

05. விலை மனு திறக்கப்படும்போது விலை மனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்வதற்கு அனுமதியுண்டு.

06. விலைமனு இல.02 தொடர்பிலான பாதுகாப்பு வைப்புத் தொகையினை பணமாக செலுத்துதல் அவசியமாகும்.

07. மேலதிக விபரங்களை 032-2265234 என்ற தொலைபேசி வழியினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

2024.12.04

எச்.எம்.எஸ்.பி. ஹேரத்
தவிசாளர் / மாவட்ட செயலாளர்
திணைக்கள பெறுகைக் குழு
புத்தளம் நிர்வாக மாவட்டம்